உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்

# செம்மையானவன் 1



Compiled by
P. Isaac Chandran

கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார், அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது.
சங்கீதம் 11:7

நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது.
சங்கீதம் 97:11

தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர், கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார், உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்.
சங்கீதம் 84:11

கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?

உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே.
சங்கீதம் 15:1,2

கர்த்தாவே, நல்லவர்களுக்கும் இருதயத்தில் செம்மையானவர்களுக்கும் நன்மைசெய்யும்.
சங்கீதம் 125:4

கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார், ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார்.

சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்.
சங்கீதம் 25:8,9

கர்த்தருடைய உடன்படிக்கையையும் அவருடைய சாட்சிகளையும் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, அவருடைய பாதைகளெல்லாம் கிருபையும் சத்தியமுமானவைகள்.
சங்கீதம் 25:10

செம்மையான இருதயமுள்ளவர்களை இரட்சிக்கிற தேவனிடத்தில் என் கேடகம் இருக்கிறது.
சங்கீதம் 7:10

நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவரை நம்புவான், செம்மையான இருதயமுள்ளவர்கள் யாவரும் மேன்மைபாராட்டுவார்கள்.
சங்கீதம் 64:10

நீ உத்தமனை நோக்கி செம்மையானவனைப் பார்த்திரு, அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்.
சங்கீதம் 37:37

நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள், செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்தமுழக்கமிடுங்கள்.
சங்கீதம் 32:11

செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும், அவன் இரக்கமும் மனஉருக்கமும் நீதியுமுள்ளவன்.
சங்கீதம் 112:4

அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்.
நீதிமொழிகள் 2:7

செவ்வையானவர்கள் பூமியிலே வாசம் பண்ணுவார்கள்: உத்தமர்கள் அதிலே தங்கியிருப்பார்கள்.
நீதிமொழிகள் 2:21

துன்மார்க்கனுடைய வீடு அழியும், செம்மையானவனுடைய கூடாரமோ செழிக்கும்.
நீதிமொழிகள் 14:11

உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்; கோணலான வழிகளில் நடக்கிறவனோ கண்டுபிடிக்கப்படுவான்.
நீதிமொழிகள் 10:9

நிதானமாய் நடக்கிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான்; தன் வழிகளில் தாறுமாறானவனோ அவரை அலட்சியம்பண்ணுகிறான்.
நீதிமொழிகள் 14:2

நீதிமானுடைய பாதை செம்மையாயிருக்கிறது, மகா நீதிபரராகிய நீர் நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறீர்.
ஏசாயா 26:7

ஆம்! கர்த்தருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது. உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்.

செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும், செம்மையானவனுடைய கூடாரமோ செழிக்கும்.

*******************